# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 24 புதன்கிழமை 08.01.2025 கதிர் 90







## ரோஹிங்கிய அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம்

### அரசிடம் சஜித் கோரிக்கை



ரோஹிங்கிய அகதிகளை இலங்கையை விட்டு அனுப்ப வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் 7 ➤

## லசந்தவின் படுகொலைக்கு நீதியை நிலைநாட்டுங்கள்

### அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

“சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் ஆகின்றன. இப்போதாவது உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுங்கள்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். 7 ➤



### வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது?

# மக்கள் ஆணைக்கு துரோகமிழைக்காதீர்

### அநுர அரசுக்கு சஜித் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 08

தற்போதைய அரசு நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக அரசுடன் தொடர்புடைய அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டாலும், நாட்டில் மனிதாபிமான ரீதியாக ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார். 7 ➤



## ஒன்றரை மாதத்தில் பலன் கிடைக்குமாம்

### அமைச்சர் விஜயபால கூறுகின்றார்



ஒன்றரை மாதங்கள் விடா முயற்சியுடன் செயல்பட்டால் ஊழல், மோசடி, இலஞ்சம், நிதி மோசடி தொடர்பான விசாரணைகளில் நாடு எதிர்பார்த்த பலனைப் பெற முடியும் என்று பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில 7 ➤

## சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ: இருவர் பரிதாப மரணம்

### குழந்தை உட்பட மேலும் இருவர் படுகாயம்

மாத்தளை, நாராங்கமுவ பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று மஹவெல 7 ➤



## தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை விடுவிக்குமாறு கோரி கையெழுத்துப் போராட்டம்



முல்லைத்தீவு மாவட்டம், விசுவமடு – தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தின நினைவேந்தலைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்துப் போராட்டம் இன்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழு உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உரித்துடையவர்கள் இணைந்து இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும் பகுதி 7 ➤

## ‘க்ளீன் ஸ்ரீலங்கா’ தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம்

### ஜனவரி 21, 22 ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானம்

‘க்ளீன் ஸ்ரீலங்கா’ தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதால், அதனை மக்கள் புரிந்து கொள்வதற்காக ஜனவரி 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் நாடாளுமன்றதஹில் விவாதம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போது அறிவித்தார்.



# முச்சக்கரவண்டி சாரதிகள் ஆர்ப்பாட்டம்






கொழும்பு, ஜன 08

சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற கார் சாரதியை தாக்கி தங்கச் சங்கிலியை கொள்ளையிட்ட குற்றச்சாட்டின் பேரில் 6 முச்சக்கர வண்டி சாரதிகள் கைது செய்யப்பட்டதற்கு எதிராக தம்புள்ளை, சீகிரிய மற்றும் ஹபரணை பிரதேசங்களில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் சங்க உறுப்பினர்கள் நேற்று பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முறைப்பாடு செய்தவர், தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் தம்புத்தேகம பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களை அனுப்பிய முன்னாள் இராணுவ சிப்பாய் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அவர், சுற்றுலாப் பயணி ஒருவரை தனது காரில் ஏற்றிச் செல்லும் போது தம்புள்ளை நகரில் முச்சக்கர வண்டி நடத்துனர்களுடன் இரண்டு நாட்களாக முரண்பட்டதாகவும், அரசாங்கத்தின் ஆதரவாளர் எனக் கூறி அநாகரீகமாக நடந்துகொண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பின்னர் தம்மை தாக்கி தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றதாக பொலிஸ் மா அதிபரிடம் போலியாக முறைப்பாடு செய்ததாகவும், இதன் விளைவாக 6 முச்சக்கர வண்டி நடத்துநர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தம்புள்ளை நகரில் மற்ற பகுதிகளைச் சேர்ந்த நபர்களை டாக்சி சேவையை இயக்க அனுமதிப்பதன் மூலம் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான முச்சக்கர வண்டி நடத்துனர்களின் வாழ்வாதாரத்தை இழக்க நேரிடும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை சமர்ப்பித்த நபரின் முறைப்பாடு குறித்து முறையான விசாரணையின்றி, உயர் பொலிஸ் அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் 6 முச்சக்கர வண்டி சாரதிகளை பொலிஸார் தன்னிச்சையாக கைது செய்துள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள ளனர்.

இந்த வகையில் அரசாங்கம் தனது ஆதரவாளர்களுக்கு அரசியல் ஆதரவு வழங்கும் எனவும் இவ்வாறு அரசியல் தலையீட்டுக்கு இடமளிக்கும் என எதிர்பார்க்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிசிடிவி தரவுகளின் அடிப்படையில் முறையான விசாரணைகளை நடத்தி நீதியை நிலைநாட்டுமாறு ஐஜிபியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து தம்புள்ளை நகரில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக பொலிஸ் குழுவொன்றை தம்புள்ளை பொலிஸார் ஈடுபடுத்தியுள்ளனர்.

(ஐ)

## குருக்கள் மீது தாக்குதல்

கிளிநொச்சி , ஜன 08

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த சிவ ஸ்ரீ சிவகுமாரன் குருக்கள் மீது அங்கிருந்த ஒருவர் கடுமையாக தாக்கியதில், படுகாயமடைந்த குருக்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் மீளாய்வு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த

சமயம் மீளாய்வு செய்வதற்கு சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குருக்கள் அணிந்திருந்த உருத்திராக்க மாலை மற்றும் தங்கச் சங்கிலி என்பனவும் அறுத்து வீசப்பட்டுள்ளன. (ஐ)

## பயணிகளை தெருவில் இறக்கிவிட்ட மூவர்

கொழும்பு, ஜன 08

அரசாங்கத்தின் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் வாகன சோதனை வேலைத்திட்டத்தின் மத்தியில் பயணிகளை நடுரோட்டில் இறக்கி விட்ட பஸ்ஸின் உரிமையாளர், சாரதி மற்றும் நடத்துனர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதி விதிகளை மீறிய குற்றத்திற்காக பொலிஸார் நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது, பாணந்துறை - புறக்கோட்டை பயணிக்கும் 100 இலக்கப் பேருந்து பயணிகளை நடுரோட்டில் இறக்கி விட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில், மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனரை 2025 ஜனவரி 15 ஆம் திகதி வரை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதுடன், ஓட்டுனருக்கு ரூ 2500 மற்றும் நடத்துனருக்கு ரூ. 750 என அபராதம் விதித்துள்ளது. அதற்குள் இருவரும் வேறு பேருந்தில் பணிபுரிந்தால் குறித்த பேருந்தின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படுமென மேல்மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மேலும் எச்சரித்துள்ளது.

இருவரும் 21 ஜனவரி 2025 அன்று பயிற்சியில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது, குறித்த பேருந்தின் வீதி அனுமதிப்பத்திரத்தை விசாரணைக்கு உட்படுத்தி 2025 ஜனவரி 10 ஆம் திகதி வரை அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தியுள்ளது. (ஐ)



## புலமைப்பரிசில் விடைத்தாள் மதிப்பீடு இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன 08

2024 ஆம் ஆண்டுககான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு இன்று (08) ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதிப்பீடுகள் நிறைவடைந்த 40 நாட்களுக்குள் பெறுபேறுகளை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை செப்டம்பர் 15 ஆம் திகதி நடைபெற்றது.

244,092 சிங்கள மொழி மூலமும் 79,787 தமிழ் மொழி மூலமும் உட்பட மொத்தம் 323,879 மாணவர்கள் பரீட்சைக்கு பதிவு செய்திருந்தனர். (ஐ)

## காட்டு வேளாண்மையால் விசாயிகள் பாதிப்பு

மட்டக்களப்பு, ஜன 07

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி கமலந கேந்திர நிலையத்திற்குட்பட்டு செய்கை செய்யப்பட்டுள்ள வேளாண்மைச் செய்கையில் காட்டு வேளாண்மையின் தாக்கம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயலில் வேளாண்மையைப் போன்றே வளரும் குறித்த காட்டு வேளாண்மையை அகற்றுவதற்கு விவசாயிகள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதோடு, பாரிய சவால்களையும் எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காட்டு வேளாண்மையின் தாக்கம் அதிகரிப்பால் எதிர்பார்த்த விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட பெரிய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில், விவசாயிகள் தொடர்ந்தும் இவ்வாறு காட்டு வேளாண்மையின் தாகத்தினாலும் மேலும் பாதிக்கப்படுவதனால் தமது இவ்வருட வாழ்வாதாரத் தொழில் கேள்விக்குறியாகியுள்ளதாக விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே இவ்வாறான நிலையிலும் விவசாயிகளுக்குரிய மானியங்கள் வழங்கப்படுவதில் திருப்தியற்ற சூழல் காணப்படுவதாகவும், இவ்வாறான தாக்கங்களைக் கட்டுப்படுவத்துவதற்கு தேவையான ஆலோசனைகளையும், பாதிப்புக்களுக்கு ஏற்ற மேலதிக இழப்பீடுகனையும் அரசு வழங்க முன்வர வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## சீமெந்து மூடைகளை திருடியவர் தப்பியோட்டம்

காத்தான்குடி, ஜன 08

கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்து மூடைகளை வீட்டின் முன் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்து திருடிய சந்தேக நபர் தப்பியோடி உள்ள நிலையில் பொலிஸார் அவரையும் அவரது வாகனத்தையும் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ எஸ் எம் ஏ ரஹீம் தெரிவித்தார் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கடற்கரை பிரதேசத்தில் கடற்கரை வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கொண்டிருக்கும் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் இருந்த சீமெந்து மூடைகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன

குறித்த வீட்டின் கட்டடப் பணிகள் நிறைவு பெற்ற நிலையில் வீட்டை பூட்டி விட்டு அடுத்த நாள் பணிகளுக்காக வந்து பார்த்தபோது வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே இருந்த 13 சீமெந்து மூடைகளை தனது வாகனத்திலேயே திருடிச் சென்றுள்ள நபர் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது

இதனை அடுத்து பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போது சீமெந்து மூடைகளை திருடிய நபர் தனது வீட்டின் ஒரு பகுதியில் சீமெந்து மூடைகளை மறைத்து வைத்திருந்த நிலையில் அங்கிருந்து 13 சீமெந்து மூடைகளை பொலிஸார் மீட்டுள்ளனர். சந்தேக நபரையும் அவரது வாகனத்தையும் பொலிஸார் தேடி வருவதுடன் மேலதிக விசாரணைகளையும் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 747 பேர் கைது



கொழும்பு, ஜன 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு மேலதிகமாக சனல் 4 ஊடகத்தில் வெளியான தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர் ரவிந்திர பண்டாரவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை கூறினார்.

அதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய சந்தேக நபர்கள் 747 பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களில் நூறு பேருக்கு மேல் நீதிமன்றத்தில் 41 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன் 14 குற்றப் பத்திரிகைகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை இது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஊடகத்தில் வெளியான தகவல்களும் அதற்கு புறம்பாக மேலதிக விசாரணைகளில் வெளியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இது தொடர்பான விசாரணைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளில் கடந்த நவம்பர் 11ஆம் கோட்டை நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. 48 சாட்சியாளர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்படி முறையான விசாரணைகள் நடைபெறுகின்றன என்றார். (ஐ)

# மனித உரிமை மீறல் சஜித் காட்டம்



அண்மையில் மியன்மாரில் இருந்து இலங்கையில் புகலிடம் கோரி முல்லைலத்தீவுக்கு வந்துள்ள ரோஹிங் கியா அகதிகளை உடனடியாக நாடு கடத்தும் மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபடுவதை அரசாங்கம் தவிர்க்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரேமதாச, அரசாங்கம் அவர்களை உடனடியாக நாடு கடத்த முயற்சிப்பதாகவும் இது மனித உரிமை மீறல் எனவும் தெரிவித்தார்.

ரோஹிங்கியா அகதிகள் தங்கள் சொந்த நாட்டில் கடுமையான தண்டனையை எதிர்கொண்டவர்கள் என்று சுட்டிக்காட்டிய பிரேமதாச, இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் போது அரசாங்கம் மீள்திருத்தம் செய்யாத கொள்கையை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"அவர்களை வலுக்கட்டாயமாக நாடு கடத்த முடியாது. இந்தச் செயலை உடனடியாக நிறுத்தி, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளுடன் கலந்துரையாடுங்கள். ரோஹிங் கியா அகதிகளுக்கு மனிதா பிமான உதவியை வழங்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

40க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 103 ரோஹிங்கியா அகதிகள் குழு 19 டிசம்பர் 2024 அன்று முல்லைத்தீவு கடற்கரையில் மீட்கப்பட்டது.

03 ஜனவரி 2025 அன்று, ரோஹிங்கியா அகதிகளை நாடு கடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அப்போது, அமைச்சர் விஜேபால, தனது அரசாங்கம் இந்த விவகாரம் குறித்து மியான்மர் அதிகாரிகளுடன் விவாதிக்கத் தொடங்கியுள்ளதாகவும், சட்ட நடவடிக்கைகளின் பின்னரே நாடு கடத்துவது சாத்தியமாகும் என்றும் கூறினார். எவ்வாறாயினும், இந்த முடிவு ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது, SJB இன் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ACMC தலைவர் ரிஷாத் பதியுதீன் உட்பட பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், அரசாங்கம் அதன் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளனர். (ஐ)

# மிதி வெடி

ஒண்டில் விசியம் தெரிஞ்சவயா இருக்க வேணும், இல்லாட்டில் விசியம் தெரிஞ்சவேற்ற கேட்டுச் செய்ய வேணும்...

எங்களுக்கு ஒண்டும் தெரியாது எண்டு மற்றவை கண்டு பிடிச்சிடக்கூடாது எண்டு இருக்கிறதெல்லாத்தையும் போட்டுடைக்கிறதா முடியக் கூடாது பாருங்கோ...

உது தான் எங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்குள்ள நடந்திருக்கு... மாகாணத் தில இருந்த பணிப்பாளர் எல்லாம் தலைகீழாத் தான் செய்வாராம்... ஆராவது கேள்வி கேட்டால், ஜென்மத்துக்கும் தலை தூக்கேலாதபடி செய்து போடுவாராம்....

ஆசிரியர்கள் நியமனம், இடமாற்றத்த்தில இருந்து வருடாந்த சம்பள ஏற்றம், பதவியுயர்வு வரை உதுதான் நடந்திருக்குது.....

எல்லாத்தையும் தலைகீழாக்கிப் போட்டு, பக்குவமாக "ரிட்டயர்" பண்ணிப் போயிட்டார். அவரை "அந்தமாதிரி" ஒருசோலியும் வராமல் ஓய்வெடுக்க வைச்சு அனுப்பினதில செயலாளருக்கும் பெரும் பங்கிருக்குதாம் பாருங்கோ....

பணிப்பாளர்.. அப்பிடிச் செய்தார்... அதைக் கேட்டார் - இதைக் கேட்டார் எண்டு எங்கட சனங்கள் ஆதாரத்தோட முறைப்பாடு செய்தும் ஆனது ஒண்டுமில்லையாம்.... ஒரே மதம் எண்டதாலயோ என்னவோ அவரைக் காப்பாத்திப் பக்குவமா அனுப்பி வைச்சிருக்கிறார் செயலாளர்.

"கிணறு வெட்டப் பூதம் கிளம்பினது" கணக்காக அவர் போன பிறகு தான் அங்க வேலை செய்யுறவையும் மெல்ல, மெல்ல வாய் திறக்கினம்... நியமன நேரத்தில நடந்த குளறுபடியளால கிட்டத்தட்ட இருபது, இருபத்தைந்து பேருக்கு வேலை இல்லாமல் போற நிலமை.... அத்தனை பேரையும் "நைஸா" கதைச்சு "ரிசைன்" பண்ண வைச்சு "சேஃவ்" ஆ வெளியில விடுறது தான் இப்பத்தைப் பிளானாம்...

"க்ளீன் ஸ்ரீலங்கா" க்குள்ள மாட்டுப்பட்டுருவம் எண்ட பயத்தில... வலு வேகமாக "அண்டர்கிரவுண்ட் டீலிங்" நடக்குதாம்...

என்னதான் நீங்க டீலிங் முடிச்சு சம்பந்தப்பட்டவையளை வெளியில அனுப்பினாலும், இந்தளவு நாளும் அடிப்படைத் தகுதியே இல்லாதவைக்கு நியமனம் குடுத்து, சம்பளம் - கிம்பளம் உட்பட இத்தியாதிகள் அத்தனையும் குடுத்தனீங்கள் எல்லே? அதை ஆர் திரும்பக் குடுக்கிறது?

தகுதி இல்லாதவையா இருந்தாலும், தாங்கள் சொல்லுறவையைத் தள்ளி விட்டுட வேணும் எண்டு தாடிக்கார அமைச்சரோட நிண்டு "கலவி" மேம்பாட்டுப் பேரவை நடத்தினவை எல்லாரும் இப்பத் தலைமறைவாகிட்டினமாம். கல்வி அமைச்சுக்கும் அவைக்கும் எந்தச் சம்பந்தமுமே இல்லையாம்... மெஞ்ஞானம் பேசிக்கொண்டு, விஞ்ஞானம் படிப்பிச்ச "பிறைவேட்" பேச்சாளர் ஒருத்தர் போட்ட தாளத்துக்கு ஆடினவை எல்லாரும் இப்ப என்ன செய்யுறதெண்டு தெரியாமல் முழிசினமாம்....

"அவர் சொல்லுறார்... அவர் சொல்லுறார்..." எண்டு கேட்டு, "அவர்" விரல் நீட்டின எல்லாருக்கும் "அப்பொயின்றமென்ற்" குடுத்தது மட்டுமில்லாமல், "அவர்" சொல்லுறார் எண்டதுக்காகத் தகுதியானவைய வெட்டி வெளியில விட்ட அதிகாரிகள் கதி? அதோகதி தான் பாருங்கோ.....

நியமனத்தைவிட இன்னுமொரு விசியமும் நடந்திருக்குது... பதவியுயர்வு, சம்பள உயர்வு குடுக்கிறதிலயும், ஆளாளுக்கு வேற அளவு கோல் பாவிச்சிருக்கினம், "பிடி"க்கு தெரிஞ்சவைக்கு ஒரு "ஸ்கேல்"... "டீ"க்குத் தெரிஞ்சவைக்கு இன்னுமொரு "ஸ்கேல்" எண்டு எல்லாத்துக்கும் அடிமட்டம் வைச்சு அளந்தளந்து தானாம் செய்வினமாம்....

"ப்ரைவேட்" பள்ளிக் கூடத்தில படிப்பிக்கிற வாத்திமாருக்குச் சம்பளம் போடுற விசியத்திலயும், அவையள ஒரு தரத்தில இருந்து இன்னொரு தரத்துக்கு உயர்த்துறதிலயும் சரி இருக்கிற சுற்றுநிருபங்களில ல்லப்பட்ட மாதிரிச் செய்யுறேல்லயாம்... செய்தது பிழை, "சேக்கிளர்" படி இப்பிடித்தானே செய்திருக்க வேணும் எண்டு போய்க் கேக்கிறவைக்கு "ஆப்பு" சைக்கிறது தானாம் நடக்குது.

2013 இலேயே தரம் 1 க்கு வந்திருக்க வேண்டியவருக்கு, 2019 இல "ப்ரமோசன்" குடுத்ததா 2024 ல கடிதம் குடுத்து... தங்கட பிழையால இந்த மனுசனுக்குக் கிடைக்க வேண்டியதெல்லாத்தையும் மறிச்சுப் போட்டு, இப்ப அந்தாளிண்ட விசியத்தில பிழை விட்டுட்டம் எண்டு ங்களே உணர்ந்து கொண்டுட்டினமாம்...

"லேட் ரியலைசேசன்" - தாமதிக்கப்பட்ட நீதி : மறுக்கப்பட்ட நீதி தானே... இப்ப அந்த மனுசனுக்கு தடைதாண்டல் பரீட்சை எழுத விடாமல் மறிச்சு வைச்சிருக்கினமாம்... அவர் தடைதாண்டினால்... "அரியஸ்" மட்டும் மில்லியன் கணக்கில குடுக்க வேண்டி இருக்குமாம்..... கணக்குப் பாத்துக் குடுக்வெளிக்கிட்டால் தங்கட குத்து வெட்டுகள் எல்லாம் வெளியில வந்திடும் எண்டுட்டு அந்த "பைல" தூக்கிக் கிடப்பில போட்டுட்டினமாம்....

எப்பிடியிருக்குது பஞ்சாயத்து? பாத்தியளே... தாங்கள் விட்ட பிழைக்கு அப்பாவிகள் பாதிக்கப்பட்டுப் போய் நிக்க... அவருக்குச் சரியாச் செய்தால் காசு குடுக்க வேண்டிவரும் எண்டு "பைல்" ஒழிக்கப்பட்டிருக்கெண்டால்... என்ன நியாயம் உது?

நான் தெரியாமல் தான் கேக்கிறன் அந்தாளுக்கு "அரியர்ஸ்" குடுக்கிறதால உங்கட சம்பளத்தில குறைக்கவே போயினம்?

"அரியர்ஸ்" குடுபட்டால் நடந்தது பிழை எண்டது "ப்ரூப்" ஆகிவிடும் எண்ட பயம் தான் போல.....

பொறுங்கோ... பொறுங்கோ... இப்ப விசியம் பெரியவர் வரை யோயிட்டுது தானே? ஸ்ரீலங்காவைக் "க்ளீன்" பண்ணுறன் எண்டு வெளிக்கிட்டிருக்கிறவர், வடக்கை எப்பிடிக் "க்ளீன்" பண்ணப்போறார் எண்டு நானும் இருந்து பாக்கத் தானே போறன்....

ஆனா... ஒரு விசியத்தைச் சொல்லியே ஆகவேணும் பாருங்கோ.... நடந்த திருக்கூத்துகளுக்கும், இப்ப இருக்கிற கல்விச் செயலாளருக்கும் எந்தச் சம்பந்தமுமில்லையாம்... எண்டாலும்... பணிப்பாளரை ஏன் உவர் காப்பாத்தினவர் எண்டது தான் இப்ப கேள்வியாம் பாருங்கோ..... கை சுத்தமா இருந்தால் மட்டும் காணாது பாருங்கோ... நாலு நல்லது கெட்டதுகளையும் தெரிஞ்சு வைச்சிருக்க வேணும் பாருங்கோ.....

நாளைக்கு அடுத்த மாவட்டத்து ஆட்சிக் கதிரையில போய் "குந்தப்" போறனீ ங்கள்... இதே சீத்துவத்தில அங்கையும் நிர்வாகம் செய்யக்கூடாது பாருங்கோ.....

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

–நரமுனி–

# இன்று மாலை ஆந்திரா வருகை தருகிறார் பிரதமர் நரேந்திரமோடி!



பிரதமர் நரேந்திர மோடி இன்று விமானம் மூலம் பிற்பகல் 4.15 மணிக்கு விசாகப்பட்டினம் வருகை தர இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்போது இரண்டு இலட்சம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதலில் அனக்காபள்ளி மாவட்டம், அச்சுதாபுரம் அருகே ரூ.1.85 ஆயிரம் கோடியில் கட்டப்பட்டுள்ள பசுமை ஹைட்ரஜன் மையத்தை தொடங்கி வைக்கிறார்.

அதன் பின்னர் ரூ.19.5 ஆயிரம் கோடி மதிப்பில் ரயில்வே திட்டங்களை தொடங்கி வைக்கிறார். புதிதாக நிர்மாணிக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட 6 சாலைகள் மற்றும் ரயில் பாதை அமைப்பதற்கான திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

மாலை 4.45 மணி முதல் 5.30 மணி வரை ஆந்திர பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகிறார்.

குறித்த நிகழ்ச்சியில் முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு, துணை முதல்- மந்திரி பவன் கல்யாண், ஆந்திர பிரதேச பா.ஜ.க. தலைவர் புரந்தேரேஸ்வரி, எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், கட்சி பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். பின்னர் ரூ.2 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இதையடுத்து வெங்கடாதிரி வண்டில்லுவில் இருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு வீதி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு 6.50 மணிக்கு புறப்பட்டு விமான நிலையம் செல்கிறார். விமான நிலையத்தில் 7.15 மணிக்கு கிளம்பி புவனேஸ்வர் செல்கிறார்.

# டெல்லி சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிடும் பகுஜன் சமாஜ் கட்சி!



பகுஜன் சமாஜ் கட்சியின் (பிஎஸ்பி) தலைவர் மாயாவதி, வரவிருக்கும் டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுவோம் என்று தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , "டெல்லி சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் பெப்ரவரி 5, 2025 அன்று ஒரே கட்டமாக நடைபெறும்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பு வரவேற்கத்தக்கது. பகுஜன் சமாஜ் கட்சி இந்தத் தேர்தலில் முழு தயார் நிலையிலும், பலத்துடனும் போராடுகிறது. இந்தத் தேர்தலில் கட்சி நிச்சயம் சிறப்பாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

"தேர்தல்கள் ஜனநாயகத்தின் முதுகெலும்பு, மற்றும் ஓரங்கட்டப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட கட்சி என்ற வகையில், இந்த தேர்தல்கள் வகுப்புவாதம் மற்றும் அரசாங்க இயந்திரங்களை தவறாகப் பயன்படுத்துவது உட்பட பிற எதிர்மறை தாக்கங்களில் இருந்து விடுபடுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்யும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்," என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டி குறித்த அறிவிப்புடன், வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்த பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, "மற்ற கட்சிகளின் கவர்ச்சியான வாக்குறுதிகளுக்கு திசைதிருப்ப வேண்டாம் என்றும் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர்களுக்கு புத்திசாலித்தனமாக வாக்களிக்க வேண்டும்," என்றும் வலியுறுத்தினார்.

டெல்லி சட்டப் பேரவைக்கு வருகிற பெப்ரவரி 5 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பெப்ரவரி 8 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெல்லியில் புதிய கட்டிடத்திற்கு மாறிய காங்கிரஸ் கட்சி தலைமை அலுவலகம்!

வளர்ந்து வரும் காலத்திற்கு ஏற்பவும், எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டும், பல்வேறு நிர்வாக வசதிக்காகவும் கடந்த 40 ஆண்டுகளாக டெல்லி அக்பர் சாலையில் இயங்கி வந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகம் கோட்லா சாலையில் உள்ள இந்திரா பவனுக்கு மாற்றப்படுவதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்திரா பவன் என பெயரிடப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை வருகிற 15-ஆம் திகதி காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி திறந்து வைக்க உள்ளார்.

இதன்போது காங்கிரஸ் கட்சியின் தலை வர் மல்லிகர்ஜுனா கார்கே, பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி எம்.பி., வதேரா மற்றும் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், கட்சியின் மூத்த தலைவர்கள், பிரதேச காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள், முன்னாள் மத்திய அமைச்சர்கள், நாடெங்கிலும் உள்ள காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் என பலர் கலந்துகொள்ள உள்ளனர்.

லோக் சபா மற்றும் ராஜ்ய சபா உறுப்பினர்கள் என மொத்தம் 400 பேருக்கு விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது புதிய முயற்சிக்கும், புதிய முன்னேற்றத்திற்கான தருணம் என காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கோட்லா சாலையில் அமைந்துள்ள இந்திரா பவன் எனும் இந்த கட்டிடம் கட்சி உறுப்பினர்களின் தேவையை கருத்தில் கொண்டு பல நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளதாகவும் கே.சி.வேணுகோபால் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரோவின் புதிய தலைவராக நியமனம் பெறும் வி.நாரயணன்!



இஸ்ரோவின் புதிய தலைவராக தமிழகத்தின் குமரி மாவட்டத்தை சேர்ந்த வி.நாராயணன் நியமனம் பெறுகிறார் என செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்திய விண்வெளி ஆய்வு மையம் எனப்படும் இஸ்ரோ பெங்களூரை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது. விண்வெளித்துறையில் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு சவால் அளிக்கும் வகையில் பல்வேறு சாதனைகளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் செய்து வருகிறது.

இஸ்ரோவின் தற்போதைய தலைவராக சோம்நாத் இருந்த நிலையில் இவரது பதவிக்காலம் அடுத்த வாரத்துடன் முடிவடைய உள்ளது. இதையடுத்து புதிய தலைவராக வி.நாராயணனை மத்திய அரசின் நியமனக்குழு தேர்வு செய்துள்ளது.

எதிர்வரும் 14-ம் திகதி இஸ்ரோ தலைவராக வி.நாராயணன் பொறுப்பேற்க உள்ளார். இஸ்ரோவின் லிகுய்ட் ப்ரொபுல்ஷின் சிஸ்டம்ஸ் மையத்தின் இயக்குனராக தற்போது வி.நாராயணன் உள்ளார்.

இவர் இஸ்ரோவில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்களால் துன்புறுத்தப்படும் ஆண்கள்!



ஆண்களை வன்முறையாளர்கள் என்று கூறும போது, அவர்கள் மீதான பார்வையும், ஒரு பெண்ணை அவ்வாறு கூறினால் முன்முடிவோடு சிலர் அதை அணுகுவதும் குறிப்பிடத்தக்கது. பெண்கள் குடும்ப வன்முறையாளர்களாக அடையாளப்படுத்தப்படுவது மிக மிக அரிது. 'குடும்ப வன்முறை' என்றவுடன் ஓர் உயரமான, கட்டுமஸ்தான ஆண், அவரின் பெண் துணையை துன்புறுத்துவதுதான் நம் கண் முன்னால் நிழலாடும். செய்திகளிலும் அதுவே சொல்லப்படும். சினிமாவிலும் அவையே காட்சியாகும். நாம் நம் அக்கம்பக்கத்திலும் அதிகம் பார்ப்பதும் அத்தகைய குற்றங்கள் தான். திருமண உறவிலும், காதல் உறவிலும் பெண்ணை ஆண் துன்புறுத்துவதே அதிகமாக நடக்கிறது.

பெண்களை வன்கொடுமையாளர்களாக, குற்றவாளிகளாக சித்தரிக்கும் கதைகள் பெரிதாக ஊடக வெளிச சத்துக்கு வருவதில்லை. அதனால், அப்படியான கதைக்களத்துடன் வரும் படைப்புகள் மீது சந்தேகப் பார்வைகளே அதிகமாக விழுகின்றன.

இது குறித்து நாட்டிங்ஹாம் ட்ரென்ட் பல்கலைக்கழகத்தின் ஃபாரென்ஸிக் சைக்காலஜி அண்ட் ஃபாரென்ஸிக் மென்ட்டல் ஹெல்த் துறையின் முதன்மைப் பேராசிரியர் ஜெனீஃபர் மெக்கே கூறும்போது, "நான் குடும்ப வன்முறையை நிகழ்த்துபவர்கள் குறித்து 10 ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வருகிறேன். அதன்படி ஆண்களுக்கு நிகராக பெண்களும் தங்களின் வாழ்க்கைத் துணையை, காதல் இணையை கொடுமைப்படுத்துவதில் சளைத்தவர்கள் இல்லை.

உலகம் முழுவதும் குடும்ப வன்முறை நிகழ்வுகளின் எண்ணிக்கையைப் பற்றி நான் இங்கே பேச விழையவில்லை. அது உண்மையில் பெண்களையே அதிகம் பாதிக்கிறது. ஆனால், குடும்ப வன்முறை என்பது ஆண்களால் பெண்களுக்கு நிகழ்த்தப்படும் குற்றம் என்று மட்டுமே பொது புத்தியில் பதியச் செய்யப்படுவது, ஆண்கள் என்பதாலேயே சிலர் அனுபவிக்கும் குடும்ப வன்முறை கண்டுகொள்ளப்படாமல் போவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கிறது என்பதே எனது கவலை" என்கிறார். குடும்ப வன்முறை எது என்ற வரையறை ஆணுக்கும், பெண்ணுக்கும் மாறுபடுகிறது. இங்கிலாந்திலும், வேல்ஸிலும் குடும்ப வன்முறைக்கு உள்ளாகும் மூன்று பேரில் ஒருவர் ஆண் என்கிறது புள்ளி விவரம். 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 2.1 சதவீதம் பேர் தங்கள் இணையால் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். இது 2023 மார்ச் மாதம் நிறைவின்போது எடுக்கப்பட்ட புள்ளிவிவரம். இதே காலகட்டத்தில் குடும்ப வன்முறைக்கு உள்ளான பெண்களின் சதவீதம் 4 என்பதும் பதிவு செய்யக்கத்தக்கது.

குடும்ப வன்முறை எது என்ற வரையறை ஆணுக்கும், பெண்ணுக்கும் மாறுபடுகிறது. ஆண்களிடம் அது பற்றி விசாரிக்கும்போது, தங்களை தங்கள் இணையர் நினைத்தபடி ஆட்டுவிப்பது, தனிமைப்படுத்துவது, அடக்கி ஆள்வது ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். சிலர் உடல் ரீதியான துன்புறுத்தல்களைப் பட்டியலிடுகின்றனர். இத்தகைய வன்முறைகள் நீண்ட காலம் நிகழும்போது அது அவர்களின் மனதிலும், உடலிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பெண்களைப் போலவே குடும்ப வன்முறையில் ஆண்களும் பாதிக்கப்படுகின்றனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து மேலும் விவரித்த பேராசிரியர் ஜெனீஃபர் மெக்கே, "குடும்ப வன்முறை தொடர்பான ஆய்வில் பங்கேற்றவர்களிடம் நாங்கள் நடத்திய ஆலோசனைகளின் போது, சில விஷயங்களை வன்முறை என்று பொதுவெளியில் யாரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத நிலை இருப்பதாகக் கூறுகின்றனர்.

நாம் சமூகத்தில் கட்டமைத்து வைத்துள்ள பார்வைகளால், புரிதல்களால் பாலினம் மட்டுமல்ல, வயதும் கூட இவர் வன்முறையாளராக இருக்க மாட்டார் என்று ஏற்க வைக்கிறது. வயதுவந்தோர் இடையே நிகழும் வன்முறைகள் போல் வளரிளம் பருவத்தினர் மத்தியிலும் வன்முறை நிலவுகிறது. ஆனால் இதெல்லாம் கொஞ்சமும் பேசப்படுவதில்லை.

17 வயது நபர் ஒருவர் அவரது காதலியை கொலை செய்ததாக கைது செய்யப்படுகிறார். அப்போது அந்தப் பெண்ணுக்கு வயது 15. கொலையை நிகழ்த்தியவருக்கு வயது 16. ஓராண்டுக்குப் பின்னர் அவர் குற்றவாளி எனக் கண்டறியப்படுகின்றார். அதன் பின்னர் அரசாங்கம் குடும்ப வன்முறை தொடர்பான வயது வரம்பை மாற்றுவது குறித்து பரிசீலிக்கிறது. அதன்படி குற்றவாளி, பாதிக்கப்பட்டவர் இருவருக்கும் வயது 16 என்றால் அந்த வழக்கை குடும்ப வன்முறை வழக்காகவும் பதிவு செய்கிறது.

வளரிளம் பருவத்தினருக்கு மத்தியில் நிலவும் டேட்டிங் வன்முறை தொடர்பான புள்ளி விவரங்கள், உலகம் முழுவதுமே 21 சதவீத இளைஞர்கள் பாலின பேதமின்றி இத்தகைய வன்முறைக்கு ஆளாகின்றனர். ஆனாலும் உடல் ரீதியான துன்புறுத்தல்களை செய்வது ஆண்களே அதிகம் என்றும் அந்த புள்ளிவிவரம் சுட்டிக் காட்டுகின்றது. பாலியல் வன்முறையை நிகழ்த்துவதில் சிறுவர்களே முன்னிலை வகிக்கின்றனர். இங்கே சிறுமிகள் பெரும்பாலும் பாதிக்கப்படுபவராகவே இருக்கின்றனர்" என்று விவரிக்கிறார் பேராசிரியர் ஜெனீஃபர் மெக்கே. இது குறித்து அவர் மேலும் சில ஆய்வுப் பார்வையை கட்டுரை வடிவில் முன்வைக்கிறார்.

வரலாற்றில் குடும்ப வன்முறை என்பது ஆணாதிக்கத்தின் விளைவாகவே காண்பிக்கப்படுகிறது. பெண்களை ஆண்கள் கட்டுப்படுத்த கையாளும் முறையாகவே விவரிக்கப்படுகிறது.

நாம் எப்போது பெண்களை பாதிக்கப்பட்டவர்களாக பார்ப்பதற்கு மட்டுமே பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆண்கள் வன்முறையை நிகழ்த்துபவர்கள் என்றே சொல்லி வைக்கப்பட்டிருக்கிறோம். இந்த மாதிரியை உடைக்கும் விதமான உறவில் இருவர் இருக்கும் போது அங்கே ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா என்று பார்க்கக் கூட நாம் எத்தனிப்பதில்லை. மேலும், அத்தகைய உறவில் குடும்ப வன்முறை நிகழ்ந்தாலும் கூட அதை நாம் வன்முறையாகப் பார்ப்பதில்லை. இது சில நேரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மீது நம் பார்வை விழாமல் தடுக்கிறது.

> "வளரிளம் பருவத்தினருக்கு மத்தியில் நிலவும் டேட்டிங் வன்முறை தொடர்பான புள்ளி விவரங்கள், உலகம் முழுவதுமே 21 சதவீத இளைஞர்கள் பாலின பேதமின்றி இத்தகைய வன்முறைக்கு ஆளாகின்றனர்."

தன்பாலின உறவாளர்கள் அதேபோல், தன்பாலின உறவாளர்களாக இருப்பவர்களில் யார் வன்முறையாளர் என்பதைப் பார்க்கத் தவறிவிடுகிறோம். இது அத்தகைய உறவாளர்கள் மத்தியில் நிலவும் வன்முறையை ஒரு முற்றுப்புள்ளியோ, தீர்வோ இல்லாமல் நீடிக்கச் செய்யும். அதேபோல் அவர்கள் தங்களுக்கு நிகழும் வன்முறைகளை எங்கே எப்படி பதிவு செய்வது என்பதற்கான வழிகாட்டுதலையும், சரியான அமைப்பையும் உருவாக்க விடாமல் தடுக்கிறது.

பாலின பாகுபாடுகளின் காரணமாக ஆண்கள் குடும்ப வன்முறையில் சிக்கி உயிரிழக்கும் போக்கு அதிகரிப்பதை அண்மைய ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

குடும்ப வன்முறை என்பது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு மட்டுமே, ஆண்கள் மட்டுமே குற்றவாளிகள் என்ற பார்வையைத் தாண்டி நாம் யோசிக்கும் போது பிரச்னையின் வேரை அணுகி தீர்வுகளைக் காண உதவும். குடும்ப வன்முறையை விளக்குவதற்கு ஆபத்து காரணிகளின் சிக்கலான தொடர்பு மீண்டும் மீண்டும் விளக்கி எடுத்துரைக்கப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் சந்தித்த மோசமான அனுபவங்கள் உறவுகளை கையாள்வதில் சிக்கல்களை ஏற்படுத்தலாம். ஒவ்வொரு தனிநபரின் குணமும் கூட அவர்கள் தங்களின் உறவுகளை எப்படிக் கையாள்கிறார்கள் என்பதை முடிவு செய்யும்.

போதை வஸ்துக்களைப் பயன்படுத்துதல் குடும்ப வன்முறையை நிகழ்த்தத் தூண்டுகிறது. மனநலன் சார்ந்த பிரச்சனைகளும் வன்முறையைத் தூண்டுகிறது. உணர்ச்சிகளைக் கையாள்வதில் சிக்கல் இருந்தால் அது நிச்சயமாக ஒருவருக்கு உறவுகளைக் கையாள்வதிலும் சிக்கலைத் தரும். பாதுகாப்பற்ற உணர்வு ஆதிக்கம் செலுத்தத் தூண்டுவதோடு வன்முறையையும் ஊக்குவிக்கும்.

இத்தகைய சிக்கலான விவகாரத்தை பாலின பேதத்துடன் அணுகுவதால் பாதிக்கப்படும் ஆண்கள் தங்களின் வேதனைகளை வெளியே முன்வந்து சொல்வதற்கு தயக்கத்தைக் கூட்டுகிறது. தான் குடும்ப வன்முறைக்கு ஆளாவதாக ஓர் ஆண் கூறினால் ஒன்று, அவர் கிண்டல் செய்யப்படுகிறார், இல்லாவிட்டால் அவரது வார்த்தைகள் நம்பப்படாமல் போகிறது.

குடும்ப வன்முறை தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் தாங்கள் கவனித்த வரை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் ஆண்கள் தங்களுக்கு உதவி கேட்பதற்கான கட்டமைப்புகள் இங்கே இல்லை என்கின்றனர். அவர்களை பாதிக்கப்பட்டவர்களாகவே அங்கீகரிக்காதபோது அவர்களுக்கான உதவி மையங்கள் உருவாவது எங்கே என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். சில இடங்களில் பாதிக்கப்பட்ட நபர் ஆணாக இருக்கையில் சமூக கட்டமைப்புகளால் அவரையே குற்றவாளி என கைதும் செய்யும் சம்பவங்களும் நடக்கின்றன.


இத்தகைய சமூகப் பார்வைகள், பெண்கள் தாங்கள் செய்வது தவறு என்பதை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி உறுதி செய்து அதிலிருந்து வெளியே வருவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்வதையும் தடுத்துவிடுகிறது. பாலினம், வயது பேதமின்றி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அவர்களுக்கான உதவியைப் பெறுவதை உறுதிசெய்ய வேண்டுமெனில், அதற்கு குடும்ப வன்முறைகளை உண்மையாக, ஆழமாக அனைத்து கோணங்களிலும் அணுகும் நடைமுறை புழக்கத்துக்கு வர வேண்டும். பாதிக்கப்பட்ட ஓர் ஆண் கூறும் சாட்சிகளைப் பதிவு செய்வதால் அது பெண்களுக்கு நிகழும் குடும்ப வன்முறைகளுக்கு எதிரான செயல்பாடுகளைக் குறைத்துவிடும் என்று கருதுவது சரி அல்ல. மாறாக, பரந்துபட்ட பார்வையானது குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவர் மீது சமூகத்தின் பச்சாதாபம் படர்வதையும், சமத்துவத்தை ஊக்குவிப்பதையும் செய்யும். இதன் மூலம் அனைத்து விதமான குடும்ப வன்முறைகளுக்கும் எதிரான போராட்டக் குரல் வலுப்பெறும் என்ற பேராசிரியர் ஜெனீஃபர் மெக்கேவின் பார்வை மிக முக்கியமானது.

# 126 பேரைப் பலி எடுத்த திபெத்

## நிலநடுக்கம் ஏற்படக் காரணம் என்ன?







நேபாள் நாட்டின் திபெத்தில் நேற்று எவரெஸ்ட் சிகரத்திற்கு அருகில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் குறைந்தது 126 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 180 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் டிங்ரி கவுண்டியில் காலை 6:35 மணிக்கு இமயமலைக்கு சுமார் 80 கி.மீ. வடக்கே ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் நேபாளம், பூடான் மற்றும் இந்தியாவின் சில பகுதிகளில் உணரப்பட்டது. நிலநடுக்கத்தின் ரிக்டர் அளவு சீன அதிகாரிகளால் 6.8 ஆகவும், அமெரிக்க புவியியல் ஆய்வில் 7.1 ஆகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் லாசா தொகுதியில் ஏற்பட்ட உடைவால் தூண்டப்பட்டதாகவும் இது குறிப்பிடத்தக்க டெக்டோனிக் அழுத்தத்தின் கீழ் உள்ள பகுதி எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 60 மில்லியன் ஆண்டுகளாக இமயமலையின் வடிவத்தை தீர்மானித்து வரும் இந்திய மற்றும் யூரேசிய டெக்டோனிக் தகடுகளின் தொடர்ச்சியான மோதல் காரணமாக இந்த பகுதி அதிக நில அதிர்வு ஏற்படும் பகுதியாக மாறியுள்ளது.

கடந்த சில தசாப்தங்களில் திபெத் பல நிலநடுக்கங்களைக் கண்டுள்ளது. இங்கு 1950 இல் 8.6 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. அசாம் மற்றும் திபெத்தில் அதிக பாதிப்புகளை ஏற்ப டுத்திய இதில் 4,800 பேர் உயிரிழந்தனர்.

டெக்டானிக் தகடுகள் அல்லது நிலத் தட்டுகள் என்பன புவியின் மேலோட்டுப் பகுதியும் கடலின் அடிப்பகுதியும் பகுதியும் இணைந்த பாறைகளால் ஆனவை. புவியின் மேலோடு உடைந்த பாறைத் துண்டுகள் ஒன்று சேர்ந்தது போன்ற அமைப்பை கொண்டன. நிலத்தட்டுகள் ஏறக்குறைய 100கி.மீ அடர்த்தியினைக் கொண்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.





# அமெரிக்காவுடன் இணையவேண்டும்

## டிரம்ப் கருத்துக்கு கனடா பதிலடி!

*கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபராக பதவியேற்க உள்ள டிரம்ப் சமீபகாலமாக தெரிவித்து வருகிறார்.*

*இதற்கிடையே கனடா பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதையடுத்து தனது கருத்தை டிரம்ப் மீண்டும் வலியுறுத்தி இருந்தார்.*

*இந்த நிலையில் டிரம்பின் கருத்துக்கு கனடா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.*

*இது குறித்து கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி கூறுகையில், “அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டிரம்பின் கருத்துக்கள் கனடாவை ஒரு வலுவான நாடாக மாற்றுவது பற்றிய முழுமையான புரிதல் இல்லாததைக் காட்டுகிறது.*

*நமது பொருளாதாரம் வலுவாக உள்ளது. எங்கள் மக்கள் வலிமையானவர்கள். அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்” என்றார்.*

*இதனையடுத்து ஜஸ்டின் ட்ரூடோ கூறும்போது, “அமெரிக்காவுடன் கனடா இணைவதற்கு வாய்ப்பே இல்லை” என்று ஆணித்தனமாக கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் காட்டுத்தீ முற்பது ஆயிரம் பேர் வெளியேற்றம்!



அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் கடுமையான காட்டுத்தீஏற்பட்டுள்ளது. இதனையடுத்து சுமார் 30 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் காட்டுத்தீ லாஸ் ஏஞ்சல்சின் மலைப்பகுதிகளுக்கு வேகமாக பரவி வருவதாகவும் ஏராளமான வீடுகள், வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகியதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் வசித்துவந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் தங்களது கார்களை ஆங்காங்கே நிறுத்தி விட்டு வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர்.

இதனால் தீயை கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டியில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மின்சாரம் இல்லாமல் தவித்து வருகிறார்கள்.

இது குறித்து கலிபோர்னியா கவர்னர் கவின் நியூசோம் கூறும்போது, காட்டுத்தீயில் பல கட்டமைப்புகள் அழிந்துள்ளன. ஆனால் சரியான எண்ணிக்கை கொடுக்கப்படவில்லை. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 13 ஆயிரம் கட்டிடங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றார். இன்று இரவு காற்று வேகம் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் காட்டுத்தீ இன்னும் வேகமாக பரவும் அபாயம் உள்ளது.

# மத்திய கிழக்கு அனைத்திலும் மோதல் வெடிக்கும் ஹமாஸுக்கு காலக்கெடு விதித்தார் டிரம்ப்!

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு டிரம்ப் வரும் ஜனவரி 20 ஆம் திகதி பதவி ஏற்க உள்ள நிலையில் தான் பதவி ஏற்பதற்குள் காசாவில் வைத்திருக்கும் பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்காவிட்டால், மத்திய கிழக்கில் மோதல் வெடிக்கும் என்று டிரம்ப் எச்சரித்துள்ளார்

கடந்த செவ்வாயன்று தனது புளோரிடா தோட்டமான மார்-ஏ-லாகோவில் ஒரு மணிநேர செய்தி மாநாட்டில் உரையாற்றிய டொனால்டு டிரம்ப், நான் பதவியேற்கும் நேரத்தில் அவர்கள் திரும்பி வரவில்லை என்றால், மத்திய கிழக்கில் அனைத்து நகரங்களும் வெடிக்கும், இது ஹமாஸுக்கு நல்லதல்ல, வெளிப்படையாக யாருக்கும் நல்லது அல்ல. இஸ்ரேல் மீது ஹமாஸ் ஒருபோதும் தாக்குதல் நடத்தி இருந்திருக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் டென்மார்க்கில் உள்ள கிரீன்லாந்தை கைப்பற்ற ராணுவத்தை பயன்படுத்துவதையும் டிரம்ப் நிராகரிக்கவில்லை. மேலும் பதவியேற்றதும் மெக்சிகோ வளைகுடா, அமெரிக்க வளைகுடா என்று மாற்றப்படும் என்றும் தாங்கள் அவர்களுக்கு உதவிகளை வழங்குவதால் அந்த பெயரே பொருத்தமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற அமர்வில் அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்திரமான நாடு உருவாகி வருகின்றது என்ற நாடாளுமன்றத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் வேளையில், மக்கள் பெரும் ஆணையைப்பெற்றுத் தந்தது ஏலவே காணப்பட்ட சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்காகவா எனக் கேள்வி எழுப்புகின்றேன்.

இந்த அரசு புதிய கடன் மறுசீரமைப்பு பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு புதிய ஐ.எம்.எப். இணக்கப்பாட்டை எட்டுவோம் என்ற அறிவிப்பை கிடப்பில் போட்டு, மக்கள் வழங்கிய ஆணையைக் காலில் போட்டு மிதித்துத் தூள் தூளாக்கி விட்டது.

பெரும் மக்கள் சார் அரசு எனக் கூறிக்கொண்டு, மக்கள் சார் செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் அதிகரித்ததாகக் கூறப்பட்ட உர மானியம் இன்னும் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை. நமது நாட்டில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் இன்னும் இந்த மானியத்தைப் பெறவில்லை.

விவசாய நடவடிக்கைகள் ஏறக்குறைய நிறைவடைந்து வரும் வேளையிலும் கூட, இந்த உர மானியங்கள் இன்னும் உரியவர்களுக்கு போய்ச்சேரவில்லை.

ஸ்திரமான நாடு உருவாகி விட்டது என்றால் 9 ஆயிரம் ரூபா மின் கட்டணம் 6 ஆயிரம் ரூபாவாகவும், 3 ஆயிரம் ரூபா மின் கட்டணம் 2 ஆயிரம் ரூபாவாகவும் மாறுவது எப்போது?

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் கடந்த அரசின் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்து, உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பெறப்பட்ட தொகையை உரிய மக்களுக்கு நிவாரணமாக வழங்கும் திகதியைத் தெரிவியுங்கள். சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களுக்கு நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்போது குறையும் கடன் தொகைச் சலுகை கிடைக்கின்றது. ஆனால், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உழைக்கும் மக்களுக்கு குறித்த நிவாரணச் சலுகை கிடைக்கவில்லை.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரின் நலன் கருதி பராட்டே சட்டத்தின் அமுலாக்கக் காலம் மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ள போதிலும், தொழிற்றுறை ரீதியாக அவர்கள் மீண்டும் எழும்புவதற்கான பக்க பலம் வழங்கப்படவில்லை. மூலதனத்துக்கான அணுகல் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலான ஒழுங்கமைப்பில் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய அரசால் அது எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இன்றும் கூட கடவுச்சீட்டுத் தட்டுப்பாட்டுக்கு உரிய தீர்வை வழங்க முடியாது போயுள்ளது.

இலங்கையில் மிகவும் வெற்றிகரமான வேலைத்திட்டமாக இருந்து வரும் 1990 சுவசெரிய திட்டம், கோவிட் காலத்திலும், நாடு வங்குரோத்தடைந்திருந்த காலத்திலும் தொடர்ச்சியான சேவையை முன்னெடுத்து வந்தது. இன்றைய நிலையில் அதன் பணிப்பாளர்கள் சபை கலைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்கு உயிரோட்டம் கொடுத்து ஆற்றலை வழங்கியவர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

முடிந்தால் அரசின் 159 பேரும் வீதிகளுக்கு இறங்கி மக்கள் பட்டுவரும் இன்னல்களை, மக்களின் குரலுக்கு செவிசாயுங்கள். மீனவ சமூகம், ஓட்டோ சாரதிகள், சுயதொழில் செய்பவர்கள் எரிபொருள் மானியத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால், இதுவரை எதுவுமே நடந்தபாடில்லை.

இவை இவ்வாறு இருக்க நாடாளுமன்றத்தில் ஸ்திரத்தன்மையைப் பற்றி பேசுவது எங்ஙனம்? தற்போது ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, தொழில் துறைகள் மூடுண்டு, வறுமை அதிகரித்து, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் காணப்படும் போது, நீங்கள் கூறும் ஸ்திரத்தன்மையால் நாட்டுக்கு எந்தப் பலனும் ஏற்படவில்லை.

இந்நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரச வளங்கள் போதுமானதாக இல்லை. அரசுக்கு மட்டுமல்ல, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து தீர்க்க வேண்டிய விடயமாகும். சிவில் சமூகம் மற்றும் சர்வதேச அமைப்புக்களைக் கூட ஒன்றிணைத்துக் கொண்டு, அனைவரினதும் உதவியுடன் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இறையாண்மை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துக் கொண்டு இவை முன்னெடுக்கப்பட வேண்டும். எமக்கு உதவி செய்யும் தரப்பினரை விரட்டி அடிக்கக் கூடாது. நாட்டுக்குப் பெற முடியுமான அதிகபட்ச ஒத்துழைப்புகளையும் வளங்களையும் பெற்றுக்கொண்டு நாட்டை சுபீட்சத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும், எதிர்க்கட்சியும் ஆதரவைப் பெற்றுத் தரும். அரசின் முற்போக்கான முன்னேற்றப் பணிகளுக்கு எமது ஆதரவைப் பெற்றுத் தருவோம்.” - என்றார்.

## ரோஹிங்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் உரையாற்றுகையில்,

“அண்மையில் மியன்மார் நாட்டு அகதிகள் குழுவொன்று முல்லைத்தீவை வந்தடைந்தனர். இவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற அரசு தயாராகி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இம்மக்களைத் திருப்பி அனுப்புவது மனிதாபிமான சட்டங்களை மீறும் செயலாகும்.

இம்மக்களுக்கு மியன்மார் நாட்டில் பாரபட்சக் கவனிப்புக் காட்டப்படுகின்றது. சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர் என உலமகே ஏற்றுக்கொண்டுள்ளதால், அவர்கள் அனைவரையும் இலங்கையிலிருந்து வெளியேற்ற எடுக்கும் முயற்சியை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும்.” - என்றார்.

## சாரதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

பல்லேபொலவிலிருந்து நாராங்கமுவ நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த வயோதிபரும் இரண்டு பெண்களும் குழந்தையும் படுகாயமடைந்துள்ள நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் வயோதிபரும் பெண்ணொருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

75 வயதுடைய வயோதிபரும், 65 வயதுடைய பெண்ணுமே உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லசந்தவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்தக் கொலைக்கான மூல காரணத்தையும், கொலைகாரர்களையும் இதுவரை எந்த அரசாலும் கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளன. இந்த விவகாரத்தை அவரது மகள் அஹிம்சா விக்கிரமதுங்க ஐக்கிய நாடுகள் சபையிடம் எடுத்துச் சென்றுள்ளார்.

அத்துடன், சிரச ஊடக வலையமைப்பின் மீதான கொடூரத் தாக்குதல் இடம்பெற்றும் 16 வருடங்கள் கடந்துள்ளன. லசந்த விக்கிரமதுங்க மற்றும் இராஜமகேந்திரன் ஆகியோர் நீதி மற்றும் நியாயத்திற்காக முன் நின்றார்கள். லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுங்கள்.” - என்றார்

## தேராவில்....




இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலும் இல்லக் காணிக்கு முன்பாகவே கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“நாட்டின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதைப் போன்று எங்களுடைய உறவுகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்துத் தர வேண்டும்.” - என்று மாவீரர்களின் உரித்துடையவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாக வும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்

# பண்டிகையை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

கொழும்பு, ஜன 08



தைப்பொங்கல் பண்டிகை, சுதந்திர விழா மற்றும் வார இறுதி விடுமுறை நாள்களில் கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரையிலும், கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலும் இந்த விசேட ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இந்த வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் விசேட ரயில்களை இயக்குவதற்கு இலங்கை ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பின்வருமாறு விசேட ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1) விசேட ரயில் எண். 01 - கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பாடு - இரவு 07:30 க்கு

இயங்கும் திகதிகள் - ஜனவரி 10, 12, 14, 17, 19, 24, 26, 31 மற்றும் பிப்ரவரி 02, 04.

2) விசேட ரயில் இலக்கம் 02 - பதுளையிலிருந்து கொழும்பு வரை

பதுளையில் இருந்து புறப்பாடு - மாலை 05:40

இயங்கும் திகதிகள் - ஜனவரி 10, 12, 14, 17, 19, 24, 26, 31 மற்றும் பிப்ரவரி 02, 04.

3) விசேட நகரங்களுக்கு இடையேயான ரயில் சேவை (4021 4022) - கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசந்துறைக்கு இடையில்

கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பாடு - முற்பகல் 05:30

காங்கசந்துறையில் இருந்து புறப்பாடு - பிற்பகல் 01:50

இயங்கும் திகதிகள் - ஜனவரி 10, 13, 14, 15, 17, 20, 24, 27, 31 மற்றும் பிப்ரவரி 03, 04. (ஐ)

## ஒன்றரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று உரையாற்றும்போது தெரிவித்தார். ஊழல், மோசடி, இலஞ்சம் மற்றும் நிதி மோசடி தொடர்பான எந்தவொரு விசாரணைகளையும் அரசு நிறுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்த விசாரணைகள் எதுவும் அரசியலாக்கப்படவில்லை என்றும் தெரிவித்த அவர், தமது அரசு பொலிஸாரைச் சிபாரிசு செய்ய வைத்துள்ளதாகவும், இரகசியப் பொலிஸாருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவை அனைத்தையும் சுயாதீனமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், ஊழல், மோசடி, இலஞ்சத்துக்கு எதிராக நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பது நாட்டு மக்களுடன் அரசு செய்துள்ள உடன்பாடு என்றும் சுட்டிக்காட்டினார்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.01.2025 இல் வெளியிடப்பெற்றது.